# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2401/39 - 2024 සැප්තැම්බර් මස 13 වැනි සිකුරාදා - 2024.09.13

*2401/39 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டம்**

22 (1) (ஆ) உப பிரிவின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளல் பற்றிய அறிவித்தல்

2024, செத்தெம்பர் 21 ஆந் திகதி நடைபெறவுள்ள சனாதிபதித் தேர்தலுக்காக 2024.08.15 ஆந் திகதி பெயர் குறித்து நியமிக்கப்பட்டதுடன், இலக்கம் 2397/51 மற்றும் 2024.08.15 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானி ஊடாக சனாதிபதித் தேர்தல் வேட்பாளராக பிரகடனப்படுத்தப்பட்ட திரு. அய்துரூஸ் முஹம்மது இல்யாஸ் 2024.08.22 ஆந் திகதி இறப்பெய்தியிருத்தல் மற்றும் அந்த மரணத்தின் அடிப்படையில் தேர்தல் ஆணைக்குழு, அந்த வேட்பாளரை பெயர் குறித்து நியமித்தவரான திரு. கே. எம். என். சஞ்சய சம்பத் ரேமன் என்பவருக்கு வேறொரு வேட்பாளரை பெயர் குறித்து நியமிக்குமாறு, 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 22(1) உப பிரிவுக்கிணங்க பணிப்பு விடுக்கப்பட்டதுடன், அவர் அந்த பணிப்புத் திகதி முதல் மூன்று தினங்களுக்குள் வேறொரு வேட்பாளரை பெயர் குறித்து நியமிப்பதற்குத் தவறியமையினால், அந்த சட்டத்தின் 22(1) (ஆ) உப பிரிவிற்கிணங்க வாக்குச் சீட்டு மற்றும் வாக்கெடுப்புடன் தொடர்புடைய வேறெல்லா ஆவணங்களிலிருந்தும் இறந்துபோன வேட்பாளரின் பெயர் நீக்கிவிடப்பட்டது என்றாற்போன்று கருதி, அந்த சட்டத்தின் 107 ஆம் மற்றும் 118 ஆம் பிரிவுகளின் கீழ் தேர்தல் ஆணைக்குழுவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய அதனுடன் தொடர்புடைய நடவடிக்கைகளை எடுப்பதாகவும், இலக்கம் 2394/51 மற்றும் 2024.07.26 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானியில் குறித்துரைக்கப்பட்டுள்ள விதத்தில், வாக்கெடுப்பு நடாத்தப்படுமெனவும் இத்தால் அறியத்தருகின்றோம்.

**ஆர். எம். ஏ. எல். ரத்நாயக்க,**
தவிசாளர்,
தேர்தல் ஆணைக்குழு.

**எம். ஏ. பீ. சீ. பெரேரா,**
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

**அமீர் பாயிஸ்,**
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

**ஏ. சண்முகநாதன்,**
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

**பேராசிரியர் லக்ஷ்மன் திசாநாயக்க,**
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

தேர்தல்கள் ஆணைக்குழு,
சரண மாவத்தை,
இராஜகிரிய,
2024, செத்தெம்பர் 13.

EOG 09 - 0116


1A - G 42702 — 19 (2024/09) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*